செ.கு.எண்: 59 1/10/09


மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009


நாள் 28.09.2009

## வாழ்க கதர்த் தொழிலாளர்கள்! வளர்க கதர்த் தொழில்!

உத்தமர் காந்தியடிகள் கிராமப்புற ஏழை மக்களுக்கான வேலைவாய்ப்பினை அதிகரித்திடும் நோக்கில், கதர்த் தொழிலை ஊக்குவித்து, உற்பத்தியாகும் கதர்துணிகளுக்கு ஆதரவளிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

அண்ணல் காந்தியடிகளின் வழியில் தமிழகம் கதர்த் தொழிலுக்கு ஊக்கமளித்து, பல்லாயிரக்கணக்கான கதர்த் தொழில் கைவினைஞர்களைப் பேணிப் பாதுகாத்து, அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான வாய்ப்புகளையும் உருவாக்கிவருகிறது. அக்கைவினைஞர்களுக்கு உதவிடும் வகையில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் தமிழக அரசு பல்வேறு சீரிய திட்டங்களைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

உள்ளூரிலேயே கிடைக்கும் மூலப்பொருள்களையும், உற்பத்தி வசதிகளையும் பயன்படுத்திக் கதர்த்துணிகளை உற்பத்தி செய்தல்; அதன் மூலம் கிராமப்புற மக்களின் வேலை வாய்ப்பினைப் பெருக்குதல்; உற்பத்தி செய்யப்படும் கதர்த்துணிகளின் விற்பனையை அதிகரிப்பதற்காக அனைத்துக் கதர்த் துணி இரகங்களுக்கும், கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் ஆண்டு முழுவதும் 30 விழுக்காடு தள்ளுபடி வழங்குதல் போன்ற பணிகளை இந்தஅரசு, மத்திய அரசின் உதவியோடு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

இத்தகைய நல்வாய்ப்புகளைப் பயன்படுத்தி, அண்ணல் காந்தியடிகள் பிறந்த நன்னாளான இப்பொன்னாளையொட்டி அதிக அளவில் கதர்த்துணிகளை வாங்கிக் கதர்த் தொழிலாளர்கள் வாழ்வு வளம்பெற உதவிடுவோம்! கிராமப்புற உழைப்பாளிகள் உயரவேண்டும் எனும் உணர்வோடு அவர்களுக்கு ஒத்துழைப்புகள் நல்கிடுவோம்!

(மு.கருணாநிதி)


வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9